# CHARITABLE ELEMENTS AND SOCIAL ECOLOGY OF VIRALI VIDHU DHUTHU

## விறலி விடு தூதின் அறக்கூறுகளும் சமூகச் சூழலியல்

**A. KALAIVANI[1], Dr. T. ANANTHAVALLI[2]**
DOCTORAL RESEARCHER[1], ASSISTANT PROFESSOR[2]
SRI SARADA COLLEGE FOR WOMEN (AUTONOMOUS), SALEM – 636016.

From that time to this time all the people should follow morality and live. Living like this is a sign of a good society. Tamil literature deals with many virtues. Among them, many morals necessary for life are classified. Mentions are made here about virtue as the gate of virtue. In this way Virali Vidu Dhuthu text's which emphasize virtue are the primary sources for this study. This book mentions about the relationship between morality and morality of men and women, morals, morality, respect for one's property, etc. This study is based on the perspective of examining ethics in literature.

**KEYWORD: Morality, Ethics, Helping morality, Protecting**

அன்றைய காலம் முதல் இக்காலம் வரை உள்ள மக்கள் அனைவரும் அறநெறியை பின்பற்றி வாழ்தல் வேண்டும். அவ்வாறு வாழ்தலே நல்ல சமூகத்திற்க்கு அடையாளமாக விளங்குகின்றது. தமிழ் இலக்கியங்கள் பல அறக்கருத்துக்களை எடுத்துரைக்கின்றன. அவற்றுள் வாழ்வியலுக்கு தேவையான அறநெறிகள் பல வகைப்படுத்தப்படுகிறது. அறத்தின் வாயிலாக விளங்கிய மாந்தர்களின் அறம் பற்றி இங்கு குறிப்பிடப்படுகின்றது. அவ்வகையில் அறத்தினை வலியுறுத்தும் விறலி விடுதூது நூல்கள் இவ்வாய்விற்கு முதன்மை மூலங்களாக திகழ்கின்றது. இல்லறத்திற்கும் அறத்திற்கும் இடையே உள்ள தொடர்பு மற்றும் ஆடவர் மகளீரின் அறநிலை, ஒழுக்க நெறி, அறத்திற்கும் பொருளிர்க்கும் இடையேயான தொடர்பு, அருளறம், ஈகையறம், அடைந்தாரைக் காத்தல் நெறி, போன்ற அறநெறிகள் பற்றி இந்நூலானது குறிப்பிடுகின்றது. இவ்வாய்வானது விறலிவிடு தூது இலக்கியங்களில் உள்ள அறநெறிகளை ஆராய்ந்து கூறும் கண்ணோட்டத்துடன் அமையப்பெற்றுள்ளது.

### முன்னுரை

இப்பூமியில் ஒருவன் அறத்தை பின்பற்றி தன் வாழ்வினை வாழ்ந்து வந்தால் அவன் இன்பமுடன் இருக்க முடியும் என இலக்கியங்கள் வாயிலாக உணரமுடிகின்றது. அறத்தினை சிறிய குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை உள்ள அனைவரும் தம் வாழ்க்கையில் பின்பற்றுதல் வேண்டும். சமூகத்திற்கு தேவையான நீதி கருத்துக்கள் பல தமிழ் இலக்கியங்களில் காணக்கிடைக்கின்றன. ஒரு மனிதன் எவ்வாறு வாழ வேண்டும், பிறருக்கு கொடுத்துதவும் ஈகைப் பண்பு, பிறருக்கு கெடுதல் நினைக்காமல் வாழ்தல் போன்ற பல அறக்கருத்துக்களை நேரடியாகவே அறநூல்கள் வழியுறுத்துகின்றன. அவற்றோடு மட்டுமல்லாமல் சிற்றின்பம் பற்றி கூறி பின்னர் நல்லின்பம் பேண வேண்டும் என சான்றோர்கள் அறிவுறுத்துப்பட்டதை போலவே விறலி விடு தூது இலக்கியம் படைக்கப்பட்டன. இவ்வாறான இலக்கியங்கள் சமூகத்தை பண்படுத்தும் விதமாக அமைந்துள்ளது. இவ்விலக்கியத்தை ஆராய்ந்து அது சமூக மக்களுக்கு உணர்த்தும் அறிவுரைகளை வெளிப்படுத்தும் வகையில் இக்கட்டுரை அமைகின்றது.

### விறலி விடு தூது

ஒருவர் தமது உள்ளக் கருத்துக்களை மற்றொருவருக்கு தெரிவிக்க எண்ணி இடையே பிறிதொருவரிடத்து சொல்லி அனுப்புதல் என்ற பொருண்மையை கொண்டு இயற்றப்படும் இலக்கிய வகையே தூதிலக்கியமாகும். இத்தூதானது ஐந்தறிவு கொண்ட அ.்.றிணைப் பொருள்களைக் கொண்டும், உயர்திணைப் பொருள்களைக் கொண்டும் நிகழ்த்தப்படுகிறன்றன. அவ்வகையில் உயர்திணைப் பொருளான விறலி என்னும் மங்கையை தலைவியிடம் தூது அனுப்புவதாக அமையப் பெற்ற இலக்கியமே விறலி விடு தூது எனப்படுகின்றது. விறலியை மையமாக கொண்டு இயற்றப்பட்டதால் இந்நூல் விறலியின் பெயர் கொண்டு அமையப்பெற்றது. விறலி என்னும் மங்கை இல்லறத்தை நல்லறமாக ஆக்குவதில் மிக முக்கிய பங்கு வகிக்கின்றாள். இவ்விலக்கியத்தில் வள்ளல்கள் மற்றும் இறைவனை கொண்டு பாடப்பெறுகின்றது.

தூது இலக்கியங்களில் பயின்று வரும் கதைக்கருவானது ஒரே பொருண்மை கொண்டதாக அமைந்துள்ளது. கல்விச் சிறப்பினை உடைய அவதானி ஒருவன் தன் மனைவியிடையே பிணக்கு

கொண்டு தன்னிடம் இருந்த பொருள்களை எல்லாம் எடுத்துக் கொண்டு வீட்டை விட்டு வெளியேறிவிடுகின்றான். அவ்வாறு ஊடல் காரணமாக பிரிந்து சென்றவன் தாசிப் பெண் ஒருத்தியின் மையலில் சிக்குண்டு தம்மிடம் இருந்த கைப் பொருள்களை எல்லாம் இழந்து அவளால் விரட்டப்பட்ட பின்பு பாட்டுரைத் தலைவனை சந்தித்து மீண்டும் வளம் பெற்று தான் செய்த தவறுகளை எண்ணி மனம் திருந்தி விறலி ஒருத்தியை தம் மனையாளிடம் தூது விடுவதாக அமைவதே விறலி விடு தூதாகும். இக்கதைப் பாங்கினை ஒட்டியே அனைத்து விறலி விடு தூது நூல்களும் அமைகின்றது.

**விறலி விடு தூது தோன்றுவதற்கான காரணக்கூறு**

விறலி விடு தூது நூல்களானது புலவரின் வறுமையினை போக்குவதற்காகவும் வள்ளல்களை புகழ்ந்து பாடுவதற்க்கும் மக்களுக்கு நல்ல அறிவுரைகளை எடுத்தியம்பவும் தோன்றியது. விறலி விடு தூது நூல்களில் இடம் பெறும் கதைத் தலைவனானவன் தன்னிடம் இருந்த பொன்னும் பொருளும் முழுமையாக பரத்தையரிடம் இழந்த பிறகே தான் செய்த தவற்றினை உணர்கின்றான். அதன்பின் விறலி ஒருத்தியை அழைத்து தன் மனைவியிடம் தூது செல்ல வேண்டுகிறான். இருவருக்குமிடையில் தூது சென்று ஊடலை நீக்குகிறாள்.

மேலும் தலைவன் தான் செய்த தவற்றிற்கு வருந்தும் மன உணர்வினையும் மீண்டும் தன் மனைவியுடன் ஒன்று கூடி வாழ விரும்பும் வேட்கை உணர்வினையும் வெளிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது. விறலி விடு தூது நூல்களானது கி.பி. 16ஆம் நூற்றாண்டில் தான் தோன்றியது. இவ்வற்றுள் முதன் முதலாக தொன்றியது 'தெய்வச் சிலையார் விறலி விடு தூது' என்பதாகும்.

**ஈகை அறம்**

அறம் என்னும் சொல்லிற்கு ஈகை என்னும் பொருள் கொள்ளுமாறு சங்க இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. தனி மனிதன் வாழ்க்கையில் இரத்தல் என்னும் செயலானது இழிவாகக் கருதப்பட்டாலும் சமூக வாழ்க்கையில் ஈகையானது உயர்ந்த அறமாக கருதப்படுகின்றது. ஒருவர் தம்முடைய வாழ்வில் துன்ப நிலையில் இருப்பாரேயின் அவருக்கு தம்மால் முடிந்த அளவிற்கு உதவுதலே ஈகையின் பாற்படும். எவ்வித பயனையும் எதிர்பார்க்காமல் ஒருவர்க்கு பொருளை வழங்குவதே ஈகையறமாகும். இதனை,

**"ஆற்றுதல் என்பதொன் றலந்தவர்க்கு குதவுதல்"**

**(கலித்தொகை – 133:6)**

என்று கலித்தொகை எடுத்துரைக்கின்றது. இதனைத் தொடர்ந்து விறலி விடு தூது இலக்கியங்களும் ஈகையறம் பற்றி குறிப்பிடுக்கின்றது. ஒருவன் தன்னிடம் இருக்கக் கூடிய பொருள்களை பிறர்க்கு பகிர்ந்தழித்து வாழ்வதே தமிழர் மேற்கொண்ட தலைசிறந்த அறநெறி ஆகும். இதனை கூளப்ப நாயக்கண் விறலி விடு தூதில்,

**"சாலை அறம்**
**செய்தோமா கோதானம் செய்தோமா பூதானம்**
**செய்தோமா சந்திரங்கள் செய்தோமா"**

**(கூளப்ப. கண்., 956-957 கண்ணி)**

என்னும் வரிகளில் பசி என வரக்கூடிய மக்களுக்கு உணவு வழங்க வேண்டுமென அறச்சாலையை நிறுவுதல் மற்றும் மற்றவர்களுக்கு உறைவிடம் ஏற்படுத்திக் கொடுப்பது உயர்வானது என்பதைச் சுட்டுகின்றன. ஆகவே பிரிதொன்றினை எதிர் நோக்காது அறத்தினை செய்ய வேண்டும் என்னும் கருத்தானது சமூகத்திற்கு வலியுறுத்தப்படுகின்றது.

**நன்றியுணர்வு**

ஒருவன் சமூகத்தோடு ஒன்றி வாழ வேண்டுமாயின் அவன் அச்சமூகத்திற்கு ஏற்றாற்போல் நடந்துக் கொள்ள வேண்டுமென்பதே இயல்பு. ஒருவர் மீது மற்றொருவர் என அனைவரிடமும் அன்புடன் நடந்துக் கொண்டால் மட்டுமே சமூகத்துடன் ஒனற முடியும். அவ்வகையில் தனைனை ஆதரித்த வள்ளல் மீது பேரன்பையும் பெரு மதிப்பையும் கொண்டு அவரை புகழ்ந்து பாடி தமது நன்றியுணர்வை காட்டுவதாக விறலி விடு தூது நூலில் அறிய முடிகின்றது. மேலும் அவர் மீது கொண்ட அன்பின் மிகுதியால் சங்கர மூர்த்தி என்னும் பெயராலேயே தம்முடைய படைப்பினையும் படைக்கின்றார். இவ்வாறான நன்றியரிதலைப் பற்றி வள்ளுவரும் தமது குறளில்

குறிப்பிட்டுள்ளார். அவ்வகையில் சங்கரமூர்த்தி வள்ளலை பாட்டுடைத் தலைவனாக எண்ணி அவரின் கொடைச் சிறப்பினையை,

**"கவிபுகன்றோற் கேகனகக் காவே கொடையான்**
**குவிதலொன்றாத் திங்கட் குடையான்-புவிதனிலே"**

**(சங்கரமூர்த்தி.வி. தூது., கண்ணி 41)**

என்று வள்ளலை புகழ்ந்து பாடுகின்றார். மேலும் அவரின் செங்கோல் தன்மையினை,

**"அட்டதிக்கொல் லாஞ்செலுத்து மாணையனா னெங்குமிவன்**
**சட்டம் நடத்துகின்ற சாமியே"**

**(சங்கரமூர்த்தி வி.தூது, கண்ணி – 43)**

என குறிப்பிடுகின்றார் இவற்றுள் வள்ளல் மீது கொண்ட அன்பின் மிகுதியே அவரை புகழ்ந்து பாடுவதற்கு தூண்டுகோலாய் அமையப் பெற்றது. மேலும் இவற்றின் வாயிலாக அன்பு பாராட்டுதல் என்ற உயர்ந்த எண்ணமும் நன்றியுணர்வும் இச் சமூகத்திற்கு எடுத்துக் காட்டுகின்றது.

பிறர் நமக்கு செய்யக் கூடிய நன்றியை நாம் ஒரு காலமும் மறவாமல் இருத்தல் என்பது மிகவும் அவசியமான ஒன்றாகிறது. இதனை கூளப்ப நாயக்கண் விறலி விடு தூது நூலில்,

**"நன்றி மறந்தாரை நடுக்கேட்குமோ தெய்வம்**
**என்று சொல்லி வந்தேன் எதிரே நான்"**

**(கூளப்ப. கண். வி. தூது., 773 கண்ணி)**

என்னும் வரிகளின் மூலம் மக்கள் அனைவரும் தாம் வாழக் கூடிய வாழ்க்கையில் நன்றியுடையவர்களாக வாழ வேண்டும் என்பதனையும் அவ்வாறு அறவழியின் படி அவர்கள் வாழவில்லை எனில் அவர்களை இறைவன் தண்டிக்கும் எனவும் அறிவுறுத்தப்படுகின்றது.

**இல்லறச் சிறப்பு**

பண்டைத் தமிழர்கள் அறத்தொடு கூடிய வாழ்வினை மேற்கொண்டனர். திருமண வாழ்வினையே இல்லறமாக கருதினர். கணவனும் மனைவியும் இணைந்து இல்லறத்தின இன்பம் துய்க்கும் அளவில் மட்டும் நில்லாமல், இல்லிருந்து அறங்கள் பலவற்றை புரிதல் வேண்டும் என்னும் கருத்தினையும் இலக்கியங்கள் வலியுறுத்துகின்றது. இதனை,

**"மனையுறை வாழ்க்கை வல்லி யாங்கு**
**மருவி னினியவு முளவோ"** **(குறுந்தொகை.322:5-6)**

என்று குறுந்தொகை சுட்டிக்காட்டுகின்றது. பண்டைத் தமிழர்கள் இல்லிருந்து அறம் பலவற்றை புரிந்து இல்லற வாழ்வின் பயனாக அறத்தை போற்றி வந்ததை தொல்காப்பியர் தமது நூலில் குறிப்பிட்டுள்ளார். விறலி விடு தூது நூல்களில் இல்லறம் நடத்தி வரும் தலைவனும் தலைவியும் ஊடல் கொண்டு பிரிந்து வாழும் நிலையில் தலைவன் செய்த தவறுகளை மறந்து தலைவனை மன்னித்து அவனை தலைவியானவள் ஏற்றுக் கொள்கின்றாள். தலைவன் என்னதான் தவற்றினை செய்தாலும் தலைவி இல்லற சிறப்பினை உணர்ந்து ஏற்றுக் கொண்டு இல்லறத்தை நல்லறமாக மாற்றி வாழ்க்கை நடத்துவதனை அறிய முடிகின்றது.

**கல்விச்சிறப்பு**

சங்க காலம் முதலாகப் பார்ப்பணர்கள் கல்வியில் மிகுந்த அறிவினைப் பெற்று திகழ்ந்தனர். இன்றளவும் அவர்கள் கல்வி பெற்று ஆட்சிகளில் இருப்பதை காணமுடிகின்றது. நாயக்கர்கள் காலங்களில் பார்ப்பணர்கள் கல்வியில் சிறந்து விளங்கியதை விறலி விடுதூது நூல்கள் பலவும் எடுத்துரைக்கின்றன. மூவரையன் விறலி விடுதூதில் வரும் கதைத் தலைவன் அவதானி வழி அறியலாம்.

**"சொற்குலவு செல்விக்கு இணங்கும் சேய்"**
**"இயற் கல்வித் திருவேங்கடநாதன்"**
**"கற்றறிந்தோரை தாய்போல் காக்கும் தயாவினான்"**
**"கற்றார் குறிக்கும் குறிப்பறியும் கோ"** **(மூவரையன்.வி.தூது, ப.எண்:2)**

என்றெல்லாம் தலைவனின் கல்விச் சிறப்பினை பாடப்பட்டிருப்பதை காணமுடிகின்றது. மேலும் கூளப்ப நாயக்கன் விறலி விடு தூதிலும் கதைத் தலைவனின் கல்விச் சிறப்பினை,

**"ஆறு வயதினுக்குள் ஆரியமும் வேதமுநாவு**
**ஏறித் தமிழ்நூல் இலக்கணத்தில் மீறினேன்"**

**(கூளப்பக்கண் வி.தூது, 98 கண்ணி)**

என்னும் கண்ணிகளில் பதினாறு வயதிற்குள் பார்ப்பணன் ஒருவன் ஆரியம் மற்றும் வேதம், தமிழ் இலக்கணம் போன்றவைகளை கற்றறிந்ததை அறியமுடிகின்றது.

**பரத்தமை ஒழுக்கம்**

பார்ப்பனர்கள் பரத்தமை ஒழுக்கம் மேற்க் கொண்டமையை விறலி விடு தூது நூல்கள் அனைத்தும் எடுத்துரைக்கின்றன. ஒரு பெண் குல மகளாவதும் விலை மகளீராக விளங்குவதும் அவளைச் சார்ந்துள்ள சூழ்நிலையே தீர்மானம் செய்கின்றது. விறலி விடு தூது நூல்கள் பெரும்பாலும் பரத்தமை ஒழுக்க முறையினைப் பற்றி விளக்குகின்றன. அவற்றுள் திருவரங்கத்துச் சிங்கையன் மகன் அவதானி என்னும் பார்ப்பனன் வேசி ஒருத்தியின் மையலில் ஈடுபட்டதை கூளப்ப நாயக்கன் விறலி விடு தூது விரித்துரைக்கிறது. காளத்தி ஐயன் மகன் ஆதி ஐயன் மதுரையிலுள்ள மாசித் தெருவினில் ஒரு தாசியுடன் உறவு கொண்டு சீரழிந்த நிலையினை,

**"ஆதியையன் என்னும் போர் அன்றே போய் இப்பால்வி**
**யாதியையன் என்னும்பேர் ஆயினான்"**

**(கூளப்ப. கண். வி. தூது 384 கண்ணி)**

என்னும் அடிகளானது விரிவாக எடுத்துரைக்கின்றது. மேலும் ஆடவர்களின் கட்டுக்கடங்காத உணர்வுகளே ஒழுக்கத்தை சீர் கேடாக்குகின்றது. பரத்தமை ஒழுக்கமே சமுதாயத்தில் பண்பாட்டுச் சீரழிவினை ஏற்படுத்துகிறது. மனிதர்களை மீண்டும் காட்டு மிராண்டி வாழ்விற்கு கொண்டு செல்கின்றதனை,

**"அப்பன் வருவான் தன்பின் மகன் வருவான்**
**தப்பு முறையென்று நீ தள்ளாதே"**

**(கூளப்ப. கண்., வி.தூது, 236 கண்ணி)**

என்னும் வரிகளானது பண்பாட்டு சிதைவினைப் பற்றி தெளிவாக விளக்குகின்றது.

**சமுதாய அறிவுரைகள்**

விறலி விடு தூது இலக்கியமானது அரசர்கள் மற்றும் வள்ளல்கள், புரவலர்கள் ஆகியோரின் வரலாற்றுச் செய்திகளை எடுத்துரைக்கின்றது. பரத்தமை ஒழுக்கம் கொண்டவர்களை சீர்திருத்தும் விதமாக இச்சமுதாயம் அறிவுறுத்துகின்றது. கல்விச் சிறப்புகளை கொண்ட அந்தணர்கள் தமது வாழ்வில் பரத்தயரின் வலையில் மயங்கி தம்மிடம் இருந்த பொருள்கள் யாவற்றையும் இழந்து அவல நிலையில் இருப்பதை இவற்றின் மூலம் இச்சமுதாயத்திற்கு அறவுரை பகர்கின்றது. விறலி விடு தூது நூல்கள் அனைத்தும் தொடக்கத்தில் காமச்சுவை மிகுந்து காணப்பட்டாலும் நூலின் முடிவில் சொல்லப்படும் அறக் கருத்துக்களானது நூலின் நோக்கத்தை தெளிவுபடுத்துகின்றது. யாதார்த்த நீதி என்பது கெட்டுத் திருந்துவது அல்லது பட்டுப் பாடம் கற்றுக்கொள்வதாக அமைகின்றது.

**முடிவுரை**

விறலி விடு தூது நூல்கள் தனி மனிதனின் வாழ்க்கையில் பின்பற்ற வேண்டிய அறங்களை எடுத்துக் காட்டுகின்றது. அறமானது மனிதனை ஒழுங்குபடுத்தும் அமைப்பாக திகழ்கிறது. ஒழுக்க நெறியின் மாற்று வடிவமே அறநெறியாகும். இத்தகைய அறமானது இல்லற வாழ்வின் அடிப்படையாக அமைகின்றது. ஒழுக்கமுள்ள வாழ்வினை வாழ்ந்து வாழ்வில் வளம்பெற அறப்பண்புகளை நாம் வளர்த்து கொள்ளுதல் வேண்டும். மேலும் மனிதன் தன் வாழ்க்கையில் மேற்க்கொள்ள வேண்டிய நற்பண்புகளையும் அறச் சிந்தனைகளையும் தெளிவாக சமூகத்திற்கு விளக்குகின்றது.

**துணைநூற்பட்டியல்**

| வ.எண் | நூல் | ஆசிரியர் | வெளியீடு |
|---|---|---|---|
| 1. | கலித்தொகை | புலியூர்கேசிகன் | சாரதா பதிப்பகம், சென்னை-14, 2009. |
| 2. | கூளப்பநாயக்கன் விறலிவிடு தூது | சரவணப்பெருமாளையர் | லட்சுமி விலாச புத்தக சாலை, சென்னை – 1928. |
| 3. | சங்கரமூர்த்தி ஐயரவர்கள் பேரில் விறலி விடு தூது | சுப்பையர் | Curabor Government Oriental manuscripts the staff of the Library, Madras, 1957. |
| 4. | குறுந்தொகை | புலியூர்கேசிகன் | சாரதா பதிப்பகம், சென்னை-14. 2009. |
| 5. | மூவரையன் விறலிவிடு | டாக்டர் இரா.நாகசாமி | டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம், திருவான்மியூர், சென்னை-60041. |